6.3.2019-AROP 14/2018-P.W.2 கருணாகரன் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

கு.வி.2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

நான் Chartered Engineer ஆக 12 வருடம் பணிசெய்து வருகிறேன். கட்டிடத்தின் மதிப்பு 10 வருடம் என நிர்ணயம் செய்துள்ளீர்கள் என்றால் ஈ.பி. பில் வவுச்சர் , ரெஜிஸ்ரேசன் டாக்குமெண்ட், கட்டிடத்தில் உள்ள கான்கிரிட்டின் நிலைப்பாடுகள் குறித்து நிர்ணயம் செய்தேன். 22.7.2016-ல் நான் மேற்படி கட்டிடத்தை ஆய்வு செய்தேன். கட்டிடத்தின் மதிப்பை நிர்ணயம் செய்யும்போது மேற்படி கட்டிடத்தின் மதிப்பில் கழிவுகள் நீக்கம் செய்யப்பட்டு மதிப்பீடு செய்தேன். ஒவ்வொரு வருடத்திற்கும் தனி தனியாக கட்டிடத்தின் மதிப்பில் கழிவு செய்யப்படவில்லை என்றால் சரி. திருபபி எடுதது உபயோகப்படுத்தப்படும் பொருட்களை கழிக்கவில்லை என்றால் கழிக்கக்கூடிய அளவுக்கு பொருட்கள் இல்லை. நில ஆரிஜிாம் செய்ததது 2014. இரண்டு வருடங்கள் கழித்துதான் தள ஆய்வு செய்தேன் என்றால் சரி. மதிப்பீட்டு அறிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் ஆய்வின்போது கட்டிடத்திற்கான புகைப்படங்கள் எதுவும் எடுக்கவில்லை என்றால் எடுத்தேன். ஆனால் சமர்ப்பிக்கவில்லை. அதனை சமர்ப்பிக்காததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. ம.சா.ஆ.6 ல் சர்வே எண் கூறவில்லை என்றால் சரி. அரசு தரப்பில் மதிப்பீடு செய்யும்போது ஆண்டுதோறும் அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படையில் தான் கட்டிட மதிப்பீடு செய்யவேண்டுமென்றால் சரி. 2015-16-க்கான பொதுப்பணித்துறையில் விலை நிர்ணயத்தின் அடிப்பையில் மதிப்பீடு செய்தேன். தேசீய நெடுஞ்சாலை சட்டத்தின்படி 3 எ அறிவிப்பு நாளிதழில் 2013-14-க்கான பொதுப்பணித்துறை மதிப்பீடு பட்டியலின்படி விலை நிர்ணயம் செய்யவேண்டுமென்றும், நான் 2015-16-ன்படி நிர்ணயம் செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்ய சென்றபோது தேசீய நெடுஞ்சாலை துறைக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. நான் அரசால் அங்கீகரிக்கப்பட்டட தனி நபர் விலை மதிப்பீட்டாளர் என்றால் சரி. என்னுடைய சான்றுக்கு பொதுப்பணித்துறை மற்றும் தேசீய நெடுஞ்சாலை துறை பொறியாளரால் சரிபார்க்கப்பட்டு சான்றுஒப்பம் பெறப்பட்டு மதிப்பு சான்று வழங்கப்பட்டால் மட்டுமே சரியானது என்று சொன்னால் சரியல்ல. தனிநபரின் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது என்றால்

சரியல்ல. கட்டிடம் மதிப்பீடு செய்யப்பட்ட தேசீய நெடுஞ்சாலையால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை கணக்கில் எடுக்காமல் தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்தது தவறு என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி.

2ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையைமேற்கொள்கிறார்.

ம.வி.இல்லை.

ஒப்பம். கருணாகரன்

ஒப்பம். எஎஎ, முதன்மை மாவட்ட நீதிபதி,மதுரை